<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 52/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | பிரபாகரன் | நாள் | 30.01.2024 |
| தகப்பனார் பெயர் | கந்தசாமி | | |

**<u>1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

34) இவ்வழக்கில் 6ம் பிரதிவாதி ஜலகண்டாபுரம் டவுண் பஞ்சாயத்தின் செயல் அலுவலர் தாவா சொத்தில் காட்டப்பட்டுள்ள சர்வே எண்.226/8ல் உள்ள நிலத்தை பராமரிப்பதாகவோ, அதில் ஏதேனும் சாலை அமைக்கப்பட்டதாகவோ என் தரப்பில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தற்போது பிரச்சனையில் உள்ள நிலத்தை தவிர்த்து மீதி நிலங்களில் பஞ்சாயத்தால் தடவழி அமைக்கப்பட்டுள்ளது.

35) சர்வே எண்.226/8ற்கு கிழபுறம் உள்ள நிலம் அரசு புறம்போக்கு நிலம் என்றால், அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் மஞ்சள் நிறமாக காட்டப்பட்டுள்ள சர்வே எண்.361/3ல் உள்ள நிலம் யாருடைய பெயரில் உள்ளது என்றால், மேற்படி நிலத்தை ராமலிங்கம் பஞ்சாயத்திற்கு தடவழிக்காக எழுதி கொடுத்துள்ளார்.

36) அவ்வாறு சர்வே எண்.361/3ல் உள்ள நிலம் ராமலிங்கத்தின் பெயரில் இருந்ததையோ, தற்போது பஞ்சாயத்தின் பெயரில் உள்ளதாக சொல்வதையோ காண்பிக்க ஏதேனும் வருவாய் துறை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தற்போது வரை சர்வே எண்.361/3ல் உள்ள நிலம் யார் பெயரில் உள்ளது என்பதை நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால், சரிதான். ராமலிங்கம் பஞ்சாயத்திற்கு தடவழி குறித்து எழுதிகொடுத்த பத்திரத்தில் சர்வே

எண்.361/3 க்கு அடுத்தாற்போல் சர்வே எண்.227/1 அமைந்துள்ளது. மேற்படி பத்திரத்தில் மேற்படி இரண்டு சர்வே எண்களில் உள்ள நிலங்களில் ஒரு பகுதியை பஞ்சாயத்திற்கு எழுதிகொடுத்ததாக உள்ளது.

37) தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்து தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன். மேற்படி அறிக்கையில் சர்வே எண்.361/3 ல் உள்ள நிலமானது அரசு புறம்போக்கு நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நீ.ம.சா.ஆ.2 ல் மஞ்சள் வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள பகுதியில் தற்போது வரை பஞ்சாயத்தால் எவ்வித சாலையும் அமைக்கப்படவில்லை என்றாலும், மேற்படி பகுதி தற்போது வரை காலி நிலமாக உள்ளது என்றாலும், சரிதான். மேற்படி பகுதி தற்போது பிரச்சனைக்குரிய பகுதி அல்ல.

38) மேற்படி நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் மஞ்சள் வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள பகுதிக்கு மேற்கில் சர்வே எண்.226/8A1 ல் உள்ள நிலத்தில் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் பட்டா நிலம் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி நிலம் தற்போது யாருடைய பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி நிலத்தை பிரதிவாதிகள் தங்களுடைய பட்டா நிலம் என உரிமை கோரிய பிறகும் நான் வருவாய் துறையில் விண்ணப்பித்து மேற்படி சர்வே எண்.226/8A1 ல் உள்ள நிலம் யாருடைய பெயரில் உள்ளது என தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன்.

39) நான் ஆவணங்களை பெற்று பார்த்தபோது நாகமாணிக்கம் பெயரில் சர்வே எண்.226/8A1 க்கு பட்டா உள்ளது குறித்தும் அவருக்கு பின்பு அவருடைய வாரிசுதாரர்களான 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் பெயரில் மேற்படி நிலத்திற்கு பட்டா மாற்றப்பட்டுள்ளது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். ஆனால் மேற்படி பட்டா பிரதிவாதிகளால் மோசடியாக பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டா குறித்து தெரிந்து கொண்டுதான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். எனது வழிதடத்தை இடையூறு செய்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

40) சர்வே எண்.226/8A1 ல் உள்ள பட்டா நிலத்திலும் பஞ்சாயத்தால் எவ்வித சாலையும் அமைக்கப்படவில்லை என்றால், பிரச்சனையில் உள்ளதால் அமைக்கவில்லை. மேற்படி சர்வே எண்.226/8A1 ல் உள்ள 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் நிலத்திற்கு மேற்குபுறமாகத்தான் தென்வடலாக சாக்கடை ஒன்று அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி சாக்கடைக்கு மேற்குபுறமாக நஞ்சண்டன் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான்.

41) மேற்படி நஞ்சுண்டன் என்பவரது வீடு சர்வே எண்.226/6 ல் வருகிறது என்றால், சரியல்ல. சர்வே எண்.226/8 ல் வருகிறது. மேற்படி நஞ்சுண்டன் என்பவரது வீட்டிற்கு அடுத்து காலி நிலமும், அதற்கு அடுத்தாற்போல் சர்வே எண்.226/8B ல் என்னுடைய வீடும் உள்ளது என்றால், சரிதான். மேற்படி நஞ்சுண்டன் என்பவருக்கு தென்வடல் சாக்கடைக்கு கிழபுறம் எந்த உரிமையும் இல்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

42) மேற்படி நஞ்சுண்டன் இவ்வழக்கிலுள்ள 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கெதிராக சர்வே எண்.226/8A1 ல் உள்ள நிலம் தன்னுடையது என ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால், கேள்விப்பட்டுள்ளேன். எப்போது மேற்படி வழக்கு குறித்து எனக்கு தெரியவந்தது என்றால், சரியாக நினைவில்லை. அதேபோல் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளும் மேற்படி நஞ்சுண்டன் என்பவருக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்து நடந்து வருகிறது என்றால், கேள்விப்பட்டுள்ளேன்.

43) மேற்படி இரு வழக்குகளுக்கு முன்பே 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் சர்வே எண்.226/8A1 ல் உள்ள நிலத்தை பாகபிரிவினை செய்து கொள்ள தங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்தனர் என்றால், ஆவணங்களை பரிசீலித்தனன் அடிப்படையில் அது குறித்து எனக்கு தெரியும்.

44) 4 ம் பிரதிவாதி கேசவன் என்பவர் சேலத்தில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். ஆனால் முகவரி எனக்கு சரியாக தெரியாது. 5 ம் பிரதிவாதி ஐயப்பன் என்பவர் தற்போது

சேலத்தில் தான் வசித்துவருகிறார் என்றால், நான் வழக்கு தாக்கல் செய்தபோது அந்த முகவரியில் வசித்து வந்தார். ஆனால் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால், எனக்கு தெரியவில்லை. 1, 2 பிரதிவாதிகள் ஜலகண்டாபுரத்தில் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால், சரிதான். 3ம் பிரதிவாதி பழனிசாமி என்பவர் ஜலகண்டாபுரத்தில் தனியாக வசித்து வந்தார் என்றால் சரிதான்.

45) மேற்படி சர்வே எண்.226/8A1ல் உள்ள நிலத்தை பாகபிரிவினை வழக்கில் ஏற்பட்ட சமாதானத்தின் பேரில் 1முதல் 5 வரையிலான பிரதிவாதிகளில் 2ம் பிரதிவாதி மேற்படி நிலத்தை வீடு கட்டி அனுபவித்து கொள்ள மேற்படி பிரதிவாதிகளுக்குள் முடிவு செய்யப்பட்டு அவ்வாறே 2ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.226/8A1ல் உள்ள நிலம் முழுவதும் அளிக்கப்பட்டுவிட்டது என்றால், கேள்விப்பட்டு தெரிந்துகொண்டேன்.

46) சர்வே எண்.226/8A1ல் உள்ள நிலம் மொத்தம் 0.04 சென்ட் தான் என்றால் சரிதான். மேற்படி 0.04 சென்ட் நிலத்தை தான் சர்வே எண்.227/1 என என் முன்விற்பனையாளர் ராமலிங்கத்தின் மூலப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.361/3ல் உள்ள நிலம் தொடர்பாக நம்பெருமாளின் பெயரிலோ, ராமலிங்கத்தின் பெயரிலோ, வையாபுரியின் பெயரிலோ ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி ராமலிங்கத்திற்கு சர்வே எண்.361/3ல் உள்ள அரசு நிலத்தை தன்னுடைய நிலம் என கூறி பஞ்சாயத்திற்கு சாலை அமைப்பதற்காக எழுதிகொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றால், சரியல்ல.

47) மேற்படி சர்வே எண்.361/3ஆனது அரசு நிலம் என்பதால்தான் ராமலிங்கம் எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் 6ம் பிரதிவாதியான ஜலகண்டாபுரம் டவுண் பஞ்சாயத்து செயல் அலுவலரின் பெயரில் தற்போது வரை எவ்வித வருவாய் ஆவணங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்றால், சரியல்ல. ராமலிங்கம் ஆவண எழுத்தர் என்றால், சரிதான். சர்வே எண்.361/3க்கு மேற்கில் உள்ள சர்வே எண்.226/8A1ல் உள்ள நிலத்தின் ஒரு பகுதியை சேர்த்துதான் அதை சர்வே எண்.227/1 என குறிப்பிட்டு 6ம் பிரதிவாதியின் பெயரில் ராமலிங்கம்

தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார் என்றால், சரிதான்.

48) சர்வே எண்.226/8A1ல் உள்ள நிலத்தின் ஒரு பகுதியை சேர்த்துதான் அதை சர்வே எண்.227/1 என குறிப்பிட்டு ராமலிங்கம் 6ம் பிரதிவாதியின் பெயரில் அளித்த தானசெட்டில்மெண்டின் அடிப்படையில் தற்போது வரை எவ்வித வருவாய் ஆவணங்களும் மாற்றப்படவில்லை என்றால் சரிதான்.

49) சர்வே எண்.226/8A1ல் உள்ள நிலம் 1முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் பட்டா நிலம் என்பதாலும், சர்வே எண்.361/3ல் உள்ள நிலம் அரசு நிலம் என்பதாலும் தான் ராமலிங்கத்திற்கு மேற்படி நிலங்கள் குறித்து 6ம் பிரதிவாதியின் பெயரில் தடவழிக்காக தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுப்பதற்கு அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், அவ்வாறு ராமலிங்கம் எழுதிகொடுத்த ஆவணங்கள் மோசடியானவை என்றாலும், மேற்படி ஆவணங்கள் 1முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றாலும், சரியல்ல.

(1முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மேட்டுர்.